காரணமாய் வந்த பீரே, செய்கொலி
ஹாஜி உமறெங்கள் ஸாஹிபும் நீரே,
காரணமாய் வந்த பீரே, ஃ

தாரணி புகழும் புகாரீ, வொலியுல்லாஹ்
தன்னுரைத்தழைத்திடும் நன்னவத்தோரே,
ஆரணம் நாவில் மறாமல், ஓதும்
ஆரிபே அடியேனுக்கருள் புரிவீரே. ஃ

(காரண)

புலி அரி மிகுந்த கான, கத்தில் பகல்
பொழுதடைந்திறை தன்னை தொழுதிடும் வக்த்தில்,
மலிவாக அரியுடன் அரசும் பதம்,
வடுடிப் பூந்திடச் செய்த குருபீடம் நீரே. ஃ

(காரண)

சிவிகை மேலுமைச் சுமந்திடவே, காபிர்
திரண்டடுத்திடச் சீஷர் வெருண்டோடவின்மேல்,
செவிதாக நிறுத்தியே நடத்தச் செய்த,
தேவரீரே எந்தன் பாவம் தீர்ப்பீரே. ஃ

(காரண)

இரவினில் தனித்தேகும் கானல், தேவு
இடியென முழங்கக் கண்டிடவென அடுத்தே,
வருவதைக் குறித்தெதிர் நோக்க அஞ்சி,
வாய்விட்டுடன் ஓடிப்போய் விட்டதாமே, ஃ

(காரண)

பரந்த பேராற்றினில் நடக்க, தண்ணீர்
பரண்டை மட்டளவான தறிந்தோரய்யன் வந்,
திரந்தொரு சுதன் தனைக் கேட்க,
தாம்பூல் எச்சி ஈந்திடச்சுதன் பெறச் செய்தமேரே. ஃ

(காரண)

தக்காரம் ஈரூரிலோர் நாள், இரு
தலைவர்கள் அழைத்திட நலமெனன உரைத்தே,
அக்கணம் ஒரு நேரம் இருவீட்டன்னம்,
அருந்திடும் வொலியென இருந்தவர் நீரே, ஃ
(காரண)

உயிரிழந்திறந்திடும் பூனை, ஜதுபு,
வக்த்தினிலு மதுடலதின் மீதிலுறவே,
தைரியத்துடனெழுந்தோடச் செய்த,
தையாளர்பையலை உய்ய கொள்வீரே, ஃ
(காரண)

ஸெய்யிதபூபக்ருபம்மோ, டெதிர்ச்
செய்தே முனிந்திட ஏதும் அந்நேரம்,
கையை நிறுத்தி எவர்க்கும் நலம்,
காட்டி தலாகினைக் கேட்டு விட்டோரே, ஃ
(காரண)

அனைவரும் மழைதேடிவரவே, உங்கள்
அருமை மைத்துனர் தம்மையுருமையோடழைத்தே,
மனையில் செங்கலை எடுத்தடுக்கச் சொல்லி,
வைக்கவே திக்கெங்கும் மழை பெய்வித்தோரே, ஃ
(காரண)

மகவெல்லாம் உயிர் போக மயங்க, உங்கள்
மைத்துனராளினி பெற்றிடு மகள் என்,
மகவுக்காமென உரை வழங்கி அந்த,
வகைப்படிகல்யாணம் நடப்பிவித்தோரே. ஃ
(காரண)

நாகூரிலுமது ஹாலறிய, ஒரு
நரர் வெள்ளி இரவினில் நடுச்சாமம் வரவே,
தேகம் துண்டாய்க்கிடந்திடக் கண்டகம்,
திறக்க நஸீஹத்துப் பெறக் கொடுத்தோரே. ஃ
(காரண)

பூரணமதி தர சுண்ணுன், வெள்ள
புதியகரண்டகமதிலழைத் தோரே,
வாரணம் வழிகாட்டப் பாதைபோந்த,
வள்ளலே பிள்ளை மேலுள்ளம் வைப்பீரே. ஃ

(காரண)

ஸாலிஹுமலைக்கேகும் கானில், மாதர்
தடுக்க அண்டுரையாமல் நடக்க அங்கிருபேர்,
ஸாலிஹு உமறே இங்குமக்கு புகாரீயுத்,
தரவில்லை தரிக்கவென்றுரைக்க மீண்டோரே. ஃ

(காரண)

அழியாத நாயன்லிகாவுக், கும்மை
அருமையோடழைக்குமுன் ஒரு மூன்று நாளாய்,
மொழியெல்லாம் அரபால் மூரீதோர்நாட்டம்,
மொழியவே அவர் மனம் தெளியச் செய்தோரே. ஃ

(காரண)

ஆவென்ற சொல்லாலமைத்தே, ஆளும்
அல்லாஹ் ஐனுபினில் சொல்லும் அந்நேரம்,
ஹூ வென்ற சொல்லுடன் தக்பீர் கட்டி,
கூடும் ஹள்ரத்தில் நாடிச் சென்றோரே. ஃ

(காரண)

குதுல்கஃதாபதினங்கில், இஷா
தொழும் நேரம் தெளிவானவெள்ளியில் ஹிஜ்ர,
த்துல்குமோராயிரத்திருனூற்றீ ரெட்டில்,
சேர்ந்தேலிகா இடஞ்சார்ந்திருந்தோரே. ஃ

(காரண)

எண்ணிலடங்காப்புதுமை, ஹால்
ஹயாத்தில் நடாத்தி வபாத்தின்பின் அது போல்,
கண்ணில் அடங்காத கஷ்பு கராமாத்து,
காட்டியகீன் எல்கை நாட்டிய பீரே. ஃ

(காரண)

பூமணமேவும் தைக்காவில், வேத
புர்கானை கரந்தோனை உறுக்கிடக் கனவில்,
தாமதியாதுடன் வரவே செய்த,
தாதாவே தமியெனுக்காதாரம் நீரே. ஃ
(காரண)

வெள்ளி இரா ராத்திபோதும், அந்த
வேளையில் பைத்தொன்று மறக்கவும் பீர்பேர்,
உள்ள பிள்ளையை தர்காவுள்ளிருந்,
தொருசத்தம் விழித்தழைத்துரைத்தவர் நீரே. ஃ
(காரண)

காபிர் வதைத்த கறுப்புக், குயிர்
காட்டென புத்திடம் கேட்டும் வராமல்,
தாபத்துடன் உம்மைக்கேட்க சீவன்,
தானெடுத்தோட ஈமான் கொடுத்தோரே. ஃ
(காரண)

மரக்கலம் இழந்துங்கள் இளைய, மகன்
மயங்கி கங்கையில் விழுந்தியங்கிடும் பொழுதில்,
உருக்கமாய் சடுதியிலெடுத்தே ஓடும்,
உருவினிலேற்றிய குருவானோர் நீரே. ஃ
(காரண)

கரி பெருத்திடும் கானிலோர்நாள், மத
களிருமதிளைய சேயினை கடுந்தடுத்தே,
வர உமதடி பரவுடன் வந்ததை,
வருத்தம் செய்தெடுத்தோட துரத்தி விட்டோரே. ஃ
(காரண)

இருநூறும் எழுபதும் இடையில், நாற்ப
திலங்கும் திருநாமம் துலங்க வந்தோரே,
ஒரு நூறும் அறுபத்திமூன்றின் இஸ்ம்,
உடையோனை ஆள்வது கடனுமக்காமே. ஃ
[காரண]

மஹ்மூது சுதன் அப்துல் காதிர், மக
வாக என் தந்தையாக வந்தோரே,
முஹ்யித்தீ னெனும் நாமமுடைய நிறு,
மூடனை நாளை மன்றுடிக் கொள்வீரே. ஃ

[காரண]

ஆதி திருப்புகழ் கொண்டும், எங்கள்
ஆல நபிமேல் ஸலவாத்து கொண்டும்,
ஓதி இம்மாலை முகித்தேன் ஹூப்பாய்,
உரைப்பவர் இறையவன் உவப்புறுவாரே. ஃ

[காரண]

ஓதுவர் கேட்பவர் வாழீ, இதை
உரைத்தோன் சகோதரர் உகுத்துடன் வாழீ,
மாதா பிதா வாழீ இரு,
மரபுகள் சம்பத்துப் பெருகிட வாழீ. ஃ

[காரண]

ஆமீன் அல்லாஹூம்ம ஆமீன் எனக்,
கருள் செய்வாய் யாறப்பல் ஆலமீன்,
முஃமின் நபி பொருட்டாலே சொர்க்கம்,
முந்த உதவி செய் எந்தன் இலாஹீ. ஃ

[காரண]

முற்றும்

★